கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள், சென்னை–600 006.

முன்னிலை : முனைவர். மு. தேவதாஸ், எம்.எஸ்.ஸி, எம்.ஃபில், பி.எச்.டி,எப்.பி.பி.எஸ்

ந.க.எண்.18808/ஜெ 2/2015 நாள் : 28 .07.2015

பொருள் : தமிழ்நாடு கல்லூரிக் கல்விப் பணி - மீள பணியமர்த்தும் திட்டம் – நிலை –1 அரசு கல்லூரி முதல்வர் மற்றும் இணை இயக்குநர்கள் – மறுநியமனம் மற்றும் ஒய்விற்கு பிறகு பணிவிடுவிப்பு – அரசளவில் மேற்கொள்ளுதல் – ஆணை – வழங்கியது – அரசாணை– உபரி நகல் அனுப்புதல் .

பார்வை: அரசாணை (நிலை) எண்.153 உயர்கல்வி (எப்1) துறை, நாள். 29.06.2015

***

பார்வையில் காணும் அரசாணையில் கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் பணிபுரியும் நிலை –1 அரசு கல்லூரி முதல்வர் மற்றும் இணை இயக்குநர்களுக்கு ஒய்வு பெற அனுமதி மற்றும் ஒய்விற்கு பின் மீளபணியமர்வு குறித்த ஆணைகள் அரசால் வெளியிடப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வரசாணையின் உபரி நகல் இத்துடன் அனுப்பலாகிறது. தவிர, இதனைப் பெற்றமைக்கான பெறல் ஏற்பினை மறு அஞ்சலில் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மு. தேவதாஸ் 29.7.15

கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) 1/6

29.7.15

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்கக இணை இயக்குநர்கள்

அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்

சார்ந்த கல்லூரி முதல்வர்கள்

நகல்

சார்ந்த கருவூல கணக்கு அலுவலர்கள் / சம்பள கணக்கு அலுவலர்கள்

மாநிலக் கணக்காயர், சென்னை–18.

அரசு முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை – 9.

– தகவலின் பொருட்டு பணிந்தனுப்பலாகிறது.

சுருக்கம்

தமிழ்நாடு கல்லூரிக் கல்விப்பணி – முதல் நிலை அரசு கல்லூரி முதல்வர்கள் மற்றும் இணை இயக்குநர்கள் – பணி ஒய்வு அனுமதி மற்றும் மறுநியமனம் வழங்குதல் – அரசளவில் மேற்கொள்ளுதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (எப்.1) துறை

அரசாணை ( நிலை) எண். 153

நாள்29.06.2015
மன்மத வருடம், ஆனி – 14
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.300, உயர்கல்வித் (எப்.1) துறை, நாள் 08.09.2006.
2. அரசாணை (நிலை) எண்.433, உயர்கல்வித் (எப்.1) துறை, நாள் 31.12.2007.
3. அரசாணை (நிலை) எண்.166, உயர்கல்வித் (எப்.1) துறை, நாள் 05.08.2009.
4. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.18808/ஜெ2/2015, நாள் 22.05.2015.

------

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணிபுரியும் முதல்வர்கள், ஆசிரியர்கள், நூலகர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்கு கல்வியாண்டிற்கிடையில் பணி ஒய்விற்குபின் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 31 ஆம் தேதி வரை மறுநியமன ஆணை வழங்க வகை செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதல்நிலை முதல்வர்களுக்கு மறுநியமனம் வழங்கும் அதிகாரத்தை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்களுக்கும் / கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் பணிபுரியும் இணை இயக்குநர்களுக்கு வழங்கியும், இணை இயக்குநர்களுக்கு மறுநியமனம் வழங்கும் அதிகாரத்தை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு வழங்கியும் ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் / கல்லூரி முதல்வர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் வயது முதிர்வின் காரணமாக அரசு பணியிலிருந்து கல்வியாண்டின் இடையிலோ, பணி ஒய்வுக்கு பின் மீளப் பணியமர்வு திட்டத்தின் கீழ் பணியில் நீடித்து கல்வியாண்டின் இறுதியிலோ அரசுப் பணியிலிருந்து ஒய்வு பெறும் நிலையில், அவர்கள் மீது யாதொரு ஒழுங்கு நடவடிக்கையோ, கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு விசாரணையோ, குற்றவியல் வழக்கோ நிலுவையில் இல்லாதிருப்பின், அவர்களை அரசு பணியிலிருந்து ஒய்வு பெறும் அனுமதியை கல்லூரி விரிவுரையாளர்களை பொறுத்தவரை சார்ந்த கல்லூரி முதல்வர்களுக்கும் மற்றும் கல்லூரி முதல்வர்கள் / கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்களை பொறுத்தவரை ஒய்வு பெற அனுமதி வழங்கும் அதிகாரத்தை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கும் வழங்கி ஆணையிடப்பட்டது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கல்லூரிக் கல்வி துறையின் கீழ் பணிபுரியும் முதல்வர்கள் / இணை இயக்குநர்கள் ஆகியோரை நியமனம் செய்யும் அதிகாரம் அரசளவில் உள்ளது என்றும், முதல்நிலை முதல்வர்கள் மற்றும் கல்லூரி கல்வி இணை இயக்குநர்களாக பணிபுரிபவர்களுக்கு ஒய்வு பெற அனுமதி மற்றும் மறுநியமன ஆணை ஆகியவற்றை கல்லூரிக் கல்வி இயக்குநர் வழங்குவதற்கு பதிலாக அரசளவில் ஆணைகளை வெளியிடலாம் எனவும் தெரிவித்து இது குறித்து ஆணை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேலே பத்தி நான்கில் உள்ள கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்தது. அதனடிப்படையில், கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் பணிபுரியும் அரசு கல்லூரிகளின் முதல்நிலை முதல்வர்கள் மற்றும் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்களுக்கு ஒய்வு பெற அனுமதி மற்றும் ஒய்விற்கு பின் மீள பணியமர்வு குறித்த ஆணைகள் அரசால் வெளியிடப்படும் என ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை – 6
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
அனைத்து கல்லூரி முதல்வர்கள்
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை– 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை,
அனைத்து கருவூல கணக்கு அலுவலர்,
உள்ளுறை கணக்கு தணிக்கை அலுவலர்,
முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை– 9.
நகல்
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9
நிதித்துறை, சென்னை–9
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9
செயலாளரின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை,
சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.
1.7.2015